09.10.2025

CC No. 9/2024

ம.சா. 1 குணசுந்தரி, க/பெ. சுரேஷ்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) எதிரி எனக்கு உறவினரா என்றால் இல்லை. எதிரிக்கு எந்த தேதியில் எப்போது பணம் கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் 31.03.2022 ல் காலை சுமார். 11.00 மணியளவில் கொடுத்தேன். எதிரி உறவினர் இல்லை என்பதால் வட்டியில்லாமல் இவ்வளவு பெரிய தொகை கொடுக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் எந்தவிதமான நேரடியான பழக்க வழக்கமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. கடன் கொடுத்ததாக சொல்லும் தேதியில் எதி'ரி எங்கு வேலை செய்தார் என்றால் HDFC வங்கியில் வேலை செய்தார். பொதுவாக எதிரி வங்கியில் வேலை செய்யும்போது காலை 09.00 மணிமுதல் மாலை 06.00 வரையில் வங்கியில் இருப்பார் என்றால் சரிதான். பொதுவாக எதிரி வீட்டில் இருக்க மாட்டார் என்று தெரிந்து வழக்கறிஞர் அறிவிப்பை எதிரியின் வீட்டு முகவரிக்கு மட்டுமே அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ. 5 ஆவணம் அறிவிப்பு எதிரிக்கு கிடைக்கக்கூடாது என்பதற்காக அவரின் செல்போன் எண்ணை அறிவிப்பு அனுப்பிய கவரில் எழுதி அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் செல்போன் எண் தவறாக இருந்ததால் நான் எழுதி அனுப்பவில்லை. எனக்கு எதியின் அலைபேசி எண் தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு இவ்வளவு பெயரிய தொகை கடனாக கொடுப்பதற்கு வசதி வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பாரத வங்கியில் கடன் பெற்றிருந்தேன் அதை பெற்றுதான் எதிரிக்கு கொடுத்தேன்.

2) நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் நான் வங்கியில் கடன் எதுவும்

பெறவில்லை என்றாலும் சரியல்ல. அதற்கான ஆவணத்தை எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். ம.சா.ஆ. 8 ஆவணமான எனது வங்கி கணக்கின் பட்டியலில் எனது 30.09.2023 ம் தேதியில் குறைந்த பட்ச தொகை பராமரிக்கவில்லை என்ற காரணத்திற்காக எனக்கு கட்டணம் வசூலிக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். வங்கியில் குறைந்த பட்ச தொகையையே பராமரிக்க முடியாதபோது வழக்கு கடன் தொகையை கொடுக்க முடியாது என்றால் என் கணவரின் வங்கி கணக்கில் இருந்து பணம் எடுத்துக்கொடுத்தேன். நான் பொய் சொல்கிறேன் என்றாலும், எனது புகார் மற்றும் அறிவிப்பில் எனது கணவரின் வங்கி கணக்கில் இருந்து எடுத்துக்கொடுத்தேன் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். என் கணவரின் வங்கி கணக்கில் இருந்து தொகை எடுத்துக்கொடுத்தற்கு எந்தவித ஆவணமும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

3) 21.09.2023 மற்றும் 26.09.2023 ஆகிய தேதிகளில் எனக்கு பணம் செலுத்திய ரேவதி யார் என்றால் என் உறவினர். அவரது கணவர் பெயர் ரமேஷ். அவரது ஊர் திருச்சி ஆகும். எனது வங்கி மேலாளரை விசாரித்தால் மேற்படி ரேவதி யார் என்பது தெரியவரும் என்றால் சரிதான். அவ்வாறு விசாரிக்க எனக்கு ஆட்சேபணை இல்லை. என்னிடம் காட்டப்படும் என்னுடைய வங்கி பரிவர்த்தனை ம.சா.ஆ.8 ஆவணத்தில் ரேவதியின் G - Pay ID என்னவென்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் studiokkdi என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனக்கு எதிரிக்கும் எந்த கொடுக்கல் வாங்கலும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் எதிரிக்கும் கற்பக விநாயகர் நகரை சேர்ந்த ரேவதி என்பவருக்கும் கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றும், 2023 பிப்ரவரி மாதம் எதிரி ரேவதியிடம் பெற்றிருந்த ரூ. 2 லட்சத்திற்கான கடனிற்கு வட்டியும் அசலும் சேர்த்து ரூ. 8 லட்சத்து 50 ஆயிரம் செலுத்திவிட்டார் என்றும், அவ்வாறு ரேவதியுடன் இருந்த கடன் பரிவர்த்தனையின்போது எதிரியுடைய 100 ரூபாய்

**வெற்று பத்திரம் Axsis வங்கி 6 காசோலைகளும், HDFC வங்கி 4 காசோலைகளும் SBI வங்கி 2 காசோலைகளும், கையொப்பம் மட்டும் செய்து பூர்த்தி செய்யாமல் ரேவதி பெற்று வைத்திருந்தார் என்றும், தொடர்ந்து எதிரியிடம் கந்து வட்டி கேட்டு ரேவதியும், சரவணன் என்பவரும் பிரச்சனை செய்ததால் அவர்கள் மீது எதிரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், ரேவதியின் தூண்டுதலின் பேரில் சரவணன் என்பவர் மூலம் CC 134/2023 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் அந்த வழக்கில் எதிரி குற்றமற்றவர் என்று விடுதலை செய்யப்பட்டார் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. ரேவதியின் தூண்டுதலின் பேரில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் எந்த கடனும் பெறவில்லை என்றாலும் காசோலையோ, வேறு எவ்வித ஆவணமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.10.09 18:18:37 +0530

விரைவு நீதிபதி, காரைக்குடி.( மு.கூ.பொ)